# இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்
# ஒலுவில்

## முப்பது வயதுக்கு குறைந்த பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு COVID19 தடுப்பூசி வழங்குதல் பற்றிய அறிவித்தல்

தென்கிழக்குப்பல்கலைக்கழக பிரதான கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 13.10.2021 (புதன்கிழமை) மற்றும் 15.10.2021 (வெள்ளிக்கிழமை) ஆகிய இரண்டு தினங்களிலும் காலை 09.00 மணியில் இருந்து நண்பகல் 12.00 மணி வரை 30 வயதுக்கு குறைந்த பல்கலைக்கழக ஊழியர்கள் (சமயா சமய, ஒப்பந்த மற்றும் நாளாந்த உள்ளடங்களாக) மற்றும் மாணவர்களுக்கும் COVID19 தடுப்பூசி வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி வயதுப்பிரிவைச்சேர்ந்த இப்பிரதேச பல்கலைக்கழக ஊழியர்களையும், மாணவர்களையும் உரிய நேரத்திற்கு வந்து தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இப்பிரதேசம் தவிர்ந்த தூர இடங்களை சேர்ந்த மேற்படி வயதுப்பிரிவை சேர்ந்த மாணவர்களும், ஊழியர்களும் தாங்கள் வசிக்கின்ற பிரதேசத்தை அண்டிய பகுதியில் உள்ள பல்கலைக்கழங்களில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தடுப்பூசி நிலையங்களில் இம் மாதம் 11 – 15 வரையான காலப்பகுதியில் தங்களுக்கான தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறும் வேண்டப்படுகிறார்கள்.

தங்களின் ஆள் அடையாள அட்டை அதேபோல் பல்கலைக்கழக அடையாள அட்டை போன்றவைகள் கோரப்படும் போது தடுப்பூசி நிலையத்தில் சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

**உபவேந்தர்**
தென் கிழக்குப்பல்கலைக்கழகம்
ஒலுவில்
07.10.2021